இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 17 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 10 – திங்கள்கிழமை 26 ஆகஸ்டு 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 17 : Thiruvalluvar Year - 2055 - Aavani 10 - Monday 26 August 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## இலட்சோப இலட்சம் உடன் பிறப்புகளுக்கு தாயாக – தந்தையாக திகழ்ந்தவர் நம் தலைவர்!

# இனம், மொழி காக்க எந்நாளும் உழைப்பதே கலைஞருக்கு நாம் காட்டும் நன்றி!

## அமைச்சர் எ.வ.வேலு எழுதிய “கலைஞர் எனும் தாய்” நூலினை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு உரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.8.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு எழுதிய ”கலைஞர் எனும் தாய் நூலினை வெளியிட, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நூல் ஆசிரியர் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம், சீதை பதிப்பகத்தின் கௌரா இராசசேகர், கழக நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஆக 26-**

**பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு எழுதிய “கலைஞர் எனும் தாய்” நூலினை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில், முத்தமிழறிஞர் கலைஞர் இலட்சோப இலட்சம் உடன்பிறப்புகளுக்கு தாயாகவும், தந்தையாகவும் திகழ்ந்தவர் என்றும், இனம், மொழி, மாநிலம் காக்க எந்நாளும் நாம் உழைப்பதே தலைவர் கலைஞருக்கு நாம் காட்டும் நன்றி என்றும் உணர்ச்சிப் பெருக்குடன் குறிப்பிட்டார்.**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (24.08.2024) சென்னை, கலைவாணர் அரங்கில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு எழுதிய “கலைஞர் எனும் தாய்” நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:**

‘தாய்’ காவியத்தை கவிதை நடையில் தீட்டிய தலைவர் கலைஞருக்குத் தமிழோவியம் தீட்டி இருக்கிறார் நம்முடைய ஆருயிர் சகோதரர் வேலு அவர்கள். புத்தகத்தின் தலைப்பைப் பாருங்கள்... ‘கலைஞர் எனும் தாய்’! எத்தனை பொருத்தம்!

### எனக்கு தந்தையாக மட்டுமல்ல தாயாகவும் இருந்தவர் கலைஞர்!

இந்த தலைப்பிலேயே மொத்தமும் அடங்கி இருக்கிறது! தலைவர் கலைஞர் தாய் காவியம் தீட்டியவர் மட்டுமில்லை; அவர் தாயாகவும் வாழ்ந்தார். எனக்குத் தந்தை மட்டுமல்ல; தாயும் அவர்தான்! எனக்கு மட்டுமல்ல, எ.வ.வேலு அவர்களைப் போல இலட்சோப லட்சம் உடன்பிறப்புகளுக்குத் தந்தையாய் – தாயாய் – தலைவராய் இருந்து – நம்மையெல்லாம் வளர்த்து – போற்றிய அற்புத ஆளுமை தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

கழகத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமில்லை, பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய பலரையும் அரவணைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்!

அதன் அடையாளமாகத்தான், சூப்பர் ஸ்டார் ரஜினி அவர்களும், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும், இந்து என்.ராம் அவர்களும் இந்த மேடையில் இருக்கிறார்கள்!

இவர்கள் எல்லாம் தலைவர் கலைஞருடன் நெருங்கிப் பழகியவர்கள்! அவர்களும் கலைஞருடைய உடன்பிறப்புகள்தான்!

### தனது தாய் அஞ்சுகம் அம்மாளைப் பற்றி மிகமிக உருக்கமாக எழுதுவார் கலைஞர்!

அப்படித்தான், வேறுபாடு இல்லாமல் அனைவரின் மேலும் அன்பு செலுத்துபவராக நம்முடைய தலைவர் கலைஞர் இருந்தார். தலைவர் கலைஞருடைய தாய் அதாவது, என்னுடைய பாட்டி அஞ்சுகம் அம்மாள் அவரைப் பற்றி, தலைவர் கலைஞர் மிக மிக உருக்கமாக எழுதுவார்... இன்னும் சொல்லவேண்டும் என்றால், அதைவிட உருக்கமாக எழுதியவர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், நடிகர் திலகம் சிவாஜி அவர்களும்! அஞ்சுகம் அம்மையார் தங்களுக்கு எப்படியெல்லாம் உணவூட்டி, அன்பு காட்டி வளர்த்தார் என்று பேசியிருக்கிறார்கள். தன்னுடைய தாயை பெரிதும் போற்றி; தானும் தாயுள்ளத்துடன் செயல்பட்டவர் தலைவர் கலைஞர்!

### ‘கலைஞர் எனும் தாய்’ என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானது!

அப்படிப்பட்ட தலைவருக்குக் “கலைஞர் எனும் தாய்” என்ற நூல் தலைப்பு மிக மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது! எல்லோரும் சொன்னார்கள். தலைவர் கலைஞர் எ.வ.வேலு அவர்களைப் பாராட்டும்போது, எ.வ.வேலு என்றால் “எதிலும் வல்லவர்” என்று பாராட்டுவார். தலைவர் கலைஞர் அவர்களிடம் அப்படி பெயர் வாங்குவது சாதாரண விஷயமில்லை! அவருடன் பழகிய அத்தனை பேருக்கும் நன்றாக தெரியும்! அதிலும் சீனியர் துரைமுருகன் அவர்களுக்கு நன்றாக தெரியும்.

2011-ஆம் ஆண்டு வேலுவின் மகன் கம்பன் திருமணத்தை நடத்தி வைத்து முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் பேசிய போது, குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

### எ.வ.வேலுவை வெகுவாக பாராட்டியவர் கலைஞர்!

அப்போது உணவுத்துறை அமைச்சராக இருந்த எ.வ.வேலு அவர்கள், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதைக் குறிப்பிட்டதுடன், ரேஷன் கடைகள் செயல்பாட்டைப் பாராட்டி, “தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களும் பின்பற்றவேண்டும்” என்று உச்சநீதி மன்றம் பாராட்டியதைச் சொல்லி, “வேலுவைப் போன்ற ஆற்றல் பெற்றவர்களாக அனைத்து அமைச்சர்களும் வரவேண்டும்’ என்று பாராட்டினார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

> **மிசா காட்சிகளை விவரிக்கும் போது நானும் இந்தப் புத்தகத்தில் வருகிறேன். நான் தாக்கப்பட்ட காட்சிகளையும் இந்தப் புத்தகம் சொல்லுகிறது. அந்தக் காலக் கட்டத்தில் தலைவர் கலைஞர் எப்படி செயல்பட்டார் என்று வேலுவின் சொற்களில் படிக்கும்போது நான் உணர்ச்சிவசப்பட்டேன்...**

அதேபோல, தலைவர் கலைஞர் சொன்ன இன்னொரு முக்கியமான பாராட்டும் இருக்கிறது... “நான் மனதில் என்ன நினைக்கிறேனோ அதை என் வாயால் சொல்லாமலேயே, என் கண் அசைவின் மூலமாகவே அதை உணர்ந்து செய்து முடிக்கின்ற ஆற்றல் உள்ளவர்களில் தம்பி வேலு அவர்கள்தான் முதலிடத்தில் இருக்கிறார்” என்று பாராட்டினார்.

இன்று எனக்கும் அதேபோலதான் வேலு இருக்கிறார். ஆறாவது முறை கழக ஆட்சி அமைந்ததும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் பொறுப்பை நான் வேலு அவர்களிடத்தில் ஒப்படைத்தேன்.

- சென்னை, கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை
- மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்
- கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்
- திருவாரூரில் கலைஞர் கோட்டம் –

ஆகியவை வேலுவின் திறமைக்குச் சாட்சியங்களாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது!

ஏன் அண்ணா அறிவாலயத்திலும், முரசொலி அலுவலகத்திலும் அமைக்கப்பட்ட கலைஞர் சிலைகளை அமைத்தவரும் அவர்தான். இவை எல்லாவற்றுக்கும் தலையாய சாதனைதான் கடற்கரையில் அமைந்திருக்கின்ற கலைஞர் உலகம் அதைத்தான் நம்முடைய சூப்பர் ஸ்டார் குறிப்பிட்டார்.

அதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் வியந்து போகும் அளவுக்கு அதை அமைத்துத் தந்தவர் நம்முடைய வேலு அவர்கள். அவர் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மட்டுமில்லை, கழகத்தைப் பொறுத்தவரைக்கும் சொல்லவேண்டும் என்றால், சிலைகள் துறை – மணி மண்டபங்கள் துறை – விழாக்கள் ஒருங்கிணைப்புத் துறை – சிறப்பு மலர்கள் தயாரிப்புத் துறை – புத்தகங்கள் அச்சிடும் துறை – நினைவுப் பரிசுகள் வழங்கும் துறை என்று எத்தனையோ துறைகள் வேலு அவர்களிடம்தான் இப்போது இருக்கிறது!

அதுமட்டுமல்ல, அவர் திரைப்படம் எடுத்திருக்கார் – கூத்து கட்டுவார் – சினிமாவிலும், நாடகத்திலும் நடித்திருக்கிறார். எத்தனை வேலைகள் கொடுத்தாலும், அவை அத்தனையும் சிறப்பாகச் செய்து காட்டும் வல்லமை வேலுவுக்கு உண்டு.

### எழுத்திலும் வல்லவர் என்பதை காட்டியிருக்கிறார் எ.வ.வேலு!

எல்லோரும் சொன்னதுபோல, எதிலும் வல்லவரான வேலு அவர்கள், எழுத்திலும் வல்லவர் என்று இந்தப் புத்தகத்தின் மூலமாக. இன்றைக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட வேலு அவர்கள், திருக்குறளையும், கலைஞரையும் இணைத்தும் பிணைத்தும் இந்த நூலை எழுதி இருக்கிறார். திருக்குறள் பாதையில் கலைஞர் எப்படி நடந்து காட்டுவார் என்று பொருத்தமான குறள்களில் தேர்ந்தெடுத்து, இணைத்து எழுதி இருக்கிறார். இந்தப் புத்தகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு கட்டுரைகளின் தலைப்புகளுமே, தனியாக ஒரு புக் டைட்டில் மாதிரி இருக்கிறது!

- குவளையில் பூத்த குறிஞ்சி மலர்!
- கருணையும் நிதியும் கலைஞர் ஆன கதை!
- ஐந்தாம் தமிழ்ச் சங்கம் அண்ணன் கலைஞர்
- காலத்தை வென்ற காவியத் திருமகன்!
- தமிழின் தலைவாயில்! தமிழரின் கலைக்கோவில்! – இப்படி அழகான தலைப்புகளை எழுதியிருக்கிறார்.

### கலைஞர் எழுதினால் தமிழ்கொட்டும்! கலைஞரைப் பற்றி எழுதினாலும் தமிழ் கொட்டும்!

கலைஞர் எழுதினால், தமிழ் கொட்டும் என்பது எவ்வளவு உண்மையோ – அது போல கலைஞரைப் பற்றி எழுதினாலும் தமிழ் கொட்டும் என்பதற்கு “கலைஞர் எனும் தாய்” நூலும் ஒரு எடுத்துக்காட்டு.

மிசா காட்சிகளை விவரிக்கும்போது நானும் இந்தப் புத்தகத்தில் வருகிறேன். நான் தாக்கப்பட்ட காட்சிகளையும் இந்தப் புத்தகம் சொல்லுகிறது. அந்தக் காலக்கட்டத்தில் தலைவர் கலைஞர் எப்படி செயல்பட்டார் என்று வேலுவின் சொற்களில் படிக்கும்போது நான் உணர்ச்சிவசப்பட்டேன்...

எனக்கு ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது. மிசாவில் கைது செய்யப்பட்ட கழக உடன்பிறப்புகளை, குடும்பங்கள் பார்க்க அனுமதிக்கவேண்டும் என்று தலைவர் கலைஞர் சிறைத்துறையிடம் சென்று வாதாடுகிறார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் – ரூ.115.58 கோடியில்

# கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, ஆக. 26 -

முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில் இன்று (26.08.2024) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.115.58 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், இராயபுரம் மூலக்கொத்தளத்தில் புதிய சமுதாய நலக்கூடம், புரசைவாக்கம் கான்ரான் ஸ்மித் சாலையில் நவீன சலவைக் கூடம், புழல், ரெட்டேரி மற்றும் கொளத்தூர் ஏரிகளை மேம்படுத்துதல், உள்ளிட்ட 6 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்கள்.

மேலும், ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் அயனாவரம் நவீன சலவைக்கூடம் மற்றும் நியாய விலைக் கடைகள், கொளத்தூர் உணவுப்பொருள் வழங்கல் மண்டல உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் கொளத்தூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைக்கிறார்கள்.

---

# சென்னை மெரினா கடற்கரையில் திறந்தவெளி திரையரங்கம்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

*சென்னை, ஆக. 26 -*

*சென்னை மெரினா கடற்கரையில் திறந்தவெளி திரையரங்குகள் அமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. அங்கு பொழுது போக்கு அம்சங்களை ஏற்படுத்துவது தொடர்பாக அமைச்சர் கே.என். நேரு நேரில் ஆய்வு செய்தார்.*

*நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு மெரினா கடற்கரையில் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். தொடர்ந்து, முதல்வர் அறிவுறுத்தல்படி, மெரினா கடற்கரையை அழகுபடுத்துவது, பொழுது போக்கு அம்சங்களை ஏற்படுத்துவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.*

*தொடர்ந்து, கடற்கரையை தூய்மையாகப் பராமரிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், கடைகளை முறைப் படுத்துதல், மெரினா தொடர்பாக நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள், மெரினாவை அழகுபடுத்த மாநகராட்சியிடம் உள்ள திட்டங்கள் குறித்து மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரனிடம் கேட்டறிந்தார்.*

*கடற்கரையை அழகு படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மேயர் பிரியா ராஜன், மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் கூறியதாவது: உலகில் நீளமான கடற்கரைகளில் மெரினாவும் ஒன்று. மெரினாவை சர்வதேச தரத்தில் அழகு படுத்த வேண்டும் என்பதில் முதல்வர் ஸ்டாலின் உறுதியாக உள்ளார். மெரினா தொடர்பாக நீதி மன்றத்தில் உள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்காகக் காத்திருக்கிறோம்.*

*அதன் பிறகு, சர்வதேச அளவிலான கலந்தாலோசகரை நியமித்து, சுற்றுச் சூழல் விதிகளைக் கருத்தில் கொண்டு, தற்காலிக கட்டமைப்புகள் மூலம் திறந்த வெளி திரையரங்குகள், குழந்தைகளுக்கான விளையாட்டு அம்சங்கள், மாற்றுத் திறனாளிகள் சென்று கடல் அலையை ரசிப்பது போன்று, முதியோர் ரசிக்கவும் பிரத்யேக வசதி, இசை நீரூற்று உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வழக்குகள் முடிந்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப் படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.*